# PRIMARY 5 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)
# தொடக்கநிலை 5 உயர்தமிழ்ப் பயிற்சித்தாள் (தாள் 2)

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 91 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்பொருள் (தேர்வுத்தாள் 1 - 12) | 109 - 118 |
| 14 | விடைத்தாள்கள் | 119 - 144 |


WORDSMITH BEYOND LEARNING

# தேர்வுத்தாள் 1

60

**'அ' பிரிவு**

**A1 பிழைத்திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

முன்னொரு சமயம் தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய Q1. நாடு இருந்தன. மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டை ஒரு பாண்டிய அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒவ்வோர் இரவும் மாறுவேடத்தில் சென்று நகரைச் சோதனை செய்து மக்கள் Q2. நலணைப் பற்றித் தெரிந்து கொள்வான்.

ஓர் இரவு அவ்வாறு அவன் சோதனை மேற்கொள்ளும் போது, ஒரு வீட்டில் ஓர் ஏழைக் குடியானவன் தன் Q3. மனைவியின் பேசுவது அரசனின் காதில் விழுந்தது. "நாம் எத்தனை நாட்களுக்குத்தான் பொருளின்றி Q4. ஏள்மையில் வருந்துவது? ஆகவே, நான் வெளியூர் சென்று பொருளீட்டி வருகிறேன்" என்று குடியானவன் தன் மனைவியிடம் கூறினான். அதற்கு அவள், Q5. "நாங்கள் சென்றுவிட்டால் யார் என்னைக் காப்பாற்றுவார்?" என்று கேட்டாள். "நம்மையெல்லாம் காப்பாற்றத்தான் நம் அரசர் இருக்கிறாரே" என்று பெருமையாகக் கூறினான் குடியானவன்.

| வினா | விடை |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

**A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6 வீரமணி ஆங்கில நாடகத்தை எழுதி நடித்துக்காட்டினார்.

ஆங்கில நாடகம் வீரமணியால் எழுதி ________________________________

________________________________________________________________

Q7 அரசன் சினமுற்று சேவகனது தலையை வெட்டி **வீழ்த்தினான்**.

சினமுற்ற அரசனால் சேவகனது தலை ________________________________

________________________________________________________________

Q8 மக்களின் **பாடுபட்ட** உழைப்பினால் நாடு **முன்னேற்றம்** கண்டது.

நாடு முன்னேற்றம் காண்பதற்கு மக்களின் பாடுபட்ட உழைப்பே ____________

________________________________________________________________

Q9 பாகிஸ்தானில் நிகழ்ந்த **நிலநடுக்கத்தில்** பலர் உயிர் இழந்தனர்.

பாகிஸ்தானில் நிகழ்ந்த நிலநடுக்கம் பல ________________________________

________________________________________________________________

Q10 ஒரு செயலில் இடைவிடாமல் முயன்று உழைப்பவன் **விதி**யையும் வெல்லலாம்.

விதியை வெல்லவேண்டுமானால் ஒரு செயலில் __________________________

________________________________________________________________

WORDSMITH EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

## ‘ஆ’ பிரிவு

**B3 கருத்தறிதல் 1 (16 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

1. முல்லா நசுருதின் சிறந்த அறிவாளி. **<u>சாதுரியமாக</u>** எந்த ஒரு செயலையும் செய்துவிடும் **<u>திறமைசாலி</u>**. காலத்திற்கும் ஆளுக்கும் ஏற்றவாறு வியாபாரம் செய்து நல்ல லாபம் பெற்றுவிடுவார். அவர் எதைச் செய்தாலும் அதை ஏன் செய்தார் என்று அவருக்கு மட்டும் தெரியுமே தவிர எவராலும் அதன் உள்நோக்கத்தைக் கண்டுபிடிக்க முடியாது.

2. ஒரு சமயம் ஒரு கோணிப்பை நிறைய வைக்கோலை நிரப்பி எடுத்துக் கொண்டு, வியாபாரம் செய்யக் கழுதையின் மீது அமர்ந்து முல்லா கிரேக்க நாட்டிற்குச் சென்றார். நாட்டு எல்லையில் இருந்த காவல் அதிகாரிகள், வியாபாரிகள் என்ன எடுத்துச் செல்கிறார்கள் என்று அறிய சோதனை செய்வது வழக்கமாகும். முல்லா ஒவ்வொரு முறையும் கிரேக்க நாட்டுக்குள் வியாபாரம் செய்ய நுழையும் போது அதிகாரிகள் **<u>எச்சரிக்கை</u>**யுடன் சோதனை செய்தனர். வைக்கோலைத் தவிர ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் எந்தப் பொருளையோ நமக்குத் தெரியாமல் எடுத்துச் செல்கிறான் என்று காவல் அதிகாரி உறுதியாக நம்பினாரே ஒழிய, அது என்ன என்று அவரால் கண்டறிய இயலவில்லை. அது அவருக்குப் புரியாத **<u>புதிராக</u>**வே இருந்தது.

3. சில காலத்திற்குப் பின், அந்தக் காவல் அதிகாரி பணி ஓய்வு பெற்றார். ஒருநாள் நாடகம் பார்த்துவிட்டு வரும் வழியில் அவர் முல்லாவைச் சந்தித்தார். "நசுருதின் அவர்களே! இப்போது நான் அதிகாரி இல்லை. உண்மையைக் கூறுங்கள். நான் உங்கள் மீது எந்த **<u>நடவடிக்கை</u>**யும் எடுக்க முடியாது. உங்களைக் காட்டிக் கொடுக்கவும் மாட்டேன். நீங்கள் வைக்கோலைத் தவிர எதையுமே எடுத்துச் செல்லவில்லையா? நீங்கள் ஏதோ ஒரு பொருளைக் கொண்டு போகிறீர்கள் என்று என் உள்ளுணர்வு கூறியது. ஆனால், அதை எங்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. நீங்களே கூறிவிடுங்கள். என் தலையே வெடித்துவிடும் போல் இருக்கிறது" என்றார்.

4. முல்லா **<u>நகைத்து</u>**க் கொண்டே, "நான் எந்தப் பொருளையாவது மறைத்துக் கொண்டு சென்றால்தானே உங்களால் கண்டுபிடிக்க முடியும். நான் உங்கள் கண் முன்னால்தானே கடத்தினேன்" என்றார். அதிகாரி "கண் முன்னேயா? வைக்கோலைத் தவிர எதுவுமில்லையே? புரியும்படி கூறுங்கள்" என்றார். "எங்கள் ஊரில் கழுதையின் விலை குறைவு, உங்கள் ஊரில் விலை அதிகம். அதனால் ஒவ்வொரு முறையும்

கழுதை மீதேறிச் சென்று விற்றுவிட்டு வருவேன். உங்கள் கவனம் கழுதைமீது விழக்கூடாது என்பதற்காகத்தான் கோணிப்பையில் வைக்கோலை எடுத்துச் சென்றேன். நான் நினைத்தபடியே உங்கள் கவனம் கழுதை மீதிருந்த பையில்தான் சென்றதே தவிர, கழுதையைக் கவனிக்காமல் விட்டுவிட்டீர்கள். இன்னொன்றையும் நீங்கள் கவனிக்கவில்லை" என்று கூறி நிறுத்தினார் முல்லா. அதிகாரி "இன்னொன்றா?" என்று திகைத்தார். முல்லா "கழுதை மீது ஏறிச்சென்ற நான் நடந்துதான் திரும்பி வருவேன். நான் ஏறிச்சென்ற கழுதை எங்கே? அது என்னவாயிற்று? என்று கூட உங்களில் யாரும் கேட்கவில்லை" என்றார். முல்லா சாதுரியமாக இப்படி கழுதை வியாபாரம் செய்ததை அறிந்த அதிகாரிக்கு ஏற்பட்ட **<u>வியப்பு</u>** அடங்க வெகுநேரமாயிற்று. முல்லா அதற்குள் வெகுதூரம் சென்று விட்டார்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

Q11 முதல் பத்தியின் வழி கதாசிரியர் வாசகர்களுக்கு உணர்த்த விரும்பும் முக்கியக் கருத்து யாது? பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குப் புட்குறி (✓) இடவும். உன் விடைக்கான காரணங்களைக் கதையின் துணைக்கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| முல்லாவிற்கு வியாபாரத்திறமை சிறிதும் கிடையாது. | |
| முல்லாவிற்கு வியாபாரத்தில் திறமை இல்லாததால் நஷ்டம் அடைவார். | |
| முல்லா வியாபாரத்தில் நல்ல லாபம் அடைவார். | |

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q12 - Q13 கதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியா, தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்கான காரணத்தை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | **வாக்கியம்** | **சரி / தவறு** | **காரணம்** |
|---|---|---|---|
| Q12 | கிரேக்க அதிகாரிகளால் முல்லாவின் வியாபாரப் பொருள் எது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. | | |
| Q13 | முல்லா கிரேக்க நாட்டில் எந்த வியாபாரமும் செய்யவில்லை. | | |

Q14 பின்வரும் தலைப்புகளில் எந்தத் தலைப்பு இக்கதைக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்? அதற்குப் புட்குறி (✓) இடவும். உன் விடைக்கான காரணங்களை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | | | |
|---|---|---|---|
| முல்லாவின் சாதுரியம் | | முல்லாவும் அதிகாரியும் | |

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

Q15 இரண்டாம் பத்தியில், 'நெற்பயிரின் உலர்ந்த தாள்' என்பதை எந்தச் சொல் உணர்த்துகிறது. அதைக் கண்டறிந்து எழுதவும். (2 மதிப்பெண்கள்)

Q16 மூன்றாம் பத்தியில் 'மனம் அறிதல்' என்னும் பொருளை உணர்த்தும் சொல் இடம்பெற்றுள்ளது. அதைக் கண்டறிந்து எழுதவும். ( 2 மதிப்பெண்கள் )

**C4 சுயவிடைக் கருத்தறிதல் (24 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியிற் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

"ஓடி விளையாடு பாப்பா" என்ற பாரதியாரின் பாடலை நீங்கள் கேட்டிருப்பீர்கள். வளரும் குழந்தைகள் நன்கு ஓடியாடி விளையாட வேண்டும். இப்படி விளையாடுவதே நல்ல உடற்பயிற்சியாகும்.

நாம் உடற்பயிற்சி செய்யும் போது உடலில் உள்ள **தசைகள்** சுருங்கி விரிகின்றன. இவ்வாறு தசைகள் சுருங்கி விரியும்போது நமது **சுவாசம்**, இரத்த ஓட்டம், **சீரணம்** முதலியவை ***சீராக*** இயங்கும். இவற்றோடு நம் உடலில் உள்ள உறுப்புகளும் முறையாகச் செயல்படுகின்றன. எனவே, ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்வதால் நமது உடல் **உரம்** பெறும். அறிவு கூர்மை அடையும். உள்ளச்சோர்வு நீங்கும்.

உடற்பயிற்சி செய்வது நமக்கு நன்மை தரும். ஆனால், உடற்பயிற்சி செய்யத் தொடங்குவதற்கு முன் ஒவ்வொருவரும் தங்களின் உடலின் அமைப்பிற்கு ஏற்ப உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாள்தோறும் காலையில் 10 முதல் 15 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி செய்யலாம். காலையில் உறங்கி எழுந்தபின் உடற்பயிற்சி செய்வது சிறந்தது என்று கூறப்படுகிறது. நாம் உறங்கும் போது நம் உடல் நல்ல ஓய்வைப் பெறுகிறது. உறக்கம், ***சோர்வு*** அடைந்த உடலுக்குப் புத்துணர்ச்சி

ஊட்டுகிறது. ஆகையால், அந்தப் புத்துணர்ச்சியுடன் உடற்பயிற்சி செய்வது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

மெதுவோட்டம் போன்ற உடற்பயிற்சிகளில் ஆர்வம் இல்லாதோர் நண்பர்களுடன் கூடித் தங்களுக்குப் பிடித்த காற்பந்து, பூப்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளில் ஈடுபடலாம்; அல்லது யோகாசனம், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகளிலும் ஈடுபடலாம். இப்பயிற்சிகள் உடலுக்கு ***உறுதி*** அளிப்பதோடு மனச்சோர்வைக் குறைத்து மகிழ்ச்சியுடன் செயல்பட **உறுதுணை** புரிகின்றன.

இளமையிலிருந்தே உடற்பயிற்சி செய்வதன் பலன் நம் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பள்ளிகளில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எனவே, கல்வியில் சிறந்து விளங்குவதற்கு அறிவோடு ஆரோக்கியமான உடலும் உள்ளமும் தேவை என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

Q17 நமது தசைகள் சுருங்கி விரியும்போது எவை சீராக இயங்குகின்றன? (3 மதிப்பெண்கள்)

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

Q18 உடற்பயிற்சி செய்வதினால் நம் உடல் பெறும் மூன்று நன்மைகளைக் குறிப்பிடவும். (4 மதிப்பெண்கள்)

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q19 உடற்பயிற்சியைச் செய்யத் தொடங்குவதற்கு முன் நாம் எதை நினைவில் கொள்ள வேண்டும்? (3 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q20 உடற்பயிற்சி செய்வதற்குக் காலை நேரம் ஏன் சிறந்தது எனக் கூறப்படுகின்றது? (4 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q21 யோகாசனம் போன்ற பயிற்சிகள் எவற்றிற்கு உறுதுணை புரிகின்றன? (3 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q22 பள்ளிகளில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

Q23 பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வகையில் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. சோர்வு - ____________________ (2 மதிப்பெண்கள்)

ஆ. உறுதி - ____________________ (2 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING

**P5 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)**
**P5 உயர்தமிழ்ப் பயிற்சித்தாள் (தாள் 2)**

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | பொருளீட்டி | பணம் சம்பாதித்து | Earn money |
| 2. | வீழ்த்தினான் | சாய்த்தான் | Defeated |
| 3. | பாடுபட்ட | கடினமாக உழைத்த | Worked hard |
| 4. | முன்னேற்றம் | வளர்ச்சி | Development |
| 5. | நிலநடுக்கத்தில் | பூமி அதிர்வில் | Earthquake |
| 6. | விதி | விதிக்கப்பட்ட வாழ்க்கை | Fate |
| 7. | சாதுரியமாக | புத்திசாலித்தனமாக | Cleverly |
| 8. | திறமைசாலி | ஆற்றல் நிறைந்தவன் | Talented |
| 9. | எச்சரிக்கை | முன்னறிவிப்பு | Caution |
| 10. | புதிராக | விடை தெரியாத | Puzzle |
| 11. | நடவடிக்கை | செயல்பாடு | Action |
| 12. | நகைத்து | சிரித்து | Smiled |
| 13. | வியப்பு | ஆச்சரியம் | Surprise |
| 14. | தசைகள் | உடலின் உள் சதைகள் | Muscles |
| 15. | சுவாசம் | மூச்சு | Breath |
| 16. | சீரணம் | செரிமானம் | Digestion |
| 17. | சீராக | முறையாக | Properly |
| 18. | உரம் | வலிமை | Strength |
| 19. | உறுதுணை | உதவி | Help |

**P5 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2)**
**P5 உயர்தமிழ்ப் பயிற்சித்தாள் (தாள் 2)**

# விடைத்தாள்

## தேர்வுத்தாள் 1

1 நாடுகள்
2 நலனை
3 மனைவியுடன்
4 ஏழ்மையில்
5 நீங்கள்
6 நடித்துக்காட்டப்பட்டது.
7 வெட்டி வீழ்த்தப்பட்டது.
8 காரணம் ஆகும்.
9 உயிர்களை இழக்கக் காரணமானது.
10 இடைவிடாமல் முயன்று உழைக்க வேண்டும்.

Q11

| | |
|---|---|
| முல்லா வியாபாரத்தில் நல்ல லாபம் அடைவார். | √ |

முல்லா சிறந்த அறிவாளி. எந்த ஒரு செயலையும் சாதுரியமாகச் செய்துவிடும் திறமை இருந்ததால் அவர் காலத்திற்கு ஏற்றவாறு வியாபாரம் செய்வார். அதனால் அவர் நல்ல லாபம் அடைந்து விடுவார்.

Q12-13

| | **வாக்கியம்** | **சரி / தவறு** | **காரணம்** |
|---|---|---|---|
| Q12 | கிரேக்க அதிகாரிகளால் முல்லாவின் வியாபாரப் பொருள் எது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. | **சரி** | அதிகாரிகளின் கவனம் முல்லாவின் கையில் இருந்த கோணிப்பையில் என்ன இருக்கிறது என்பதில் தான் இருந்தது. சோதனையில் முல்லா பையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | வைக்கோலைத் தவிர வேறு எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று அறிந்தனர். எனவே, அவர்களால் முல்லா செய்யும் வியாபாரப் பொருள் எது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. |
| Q13 | முல்லா கிரேக்க நாட்டில் எந்த வியாபாரமும் செய்யவில்லை. | **தவறு** | முல்லா கிரேக்க நாட்டில் கழுதை வியாபாரம் செய்தார். கழுதையின் மீது ஏறி ஊருக்கு உள்ளே செல்லும் முல்லா அதை அங்கே நல்ல விலைக்கு விற்றுவிட்டுத் திரும்பி வரும்போது நடந்து வருவார். |

Q14

| | |
|---|---|
| முல்லாவின் சாதுரியம் | √ |

அதிகாரிகளின் கவனம் வியாபாரப் பொருளான கழுதை மீது விழக்கூடாது என்பதற்காக, அவர்களைத் திசை திருப்ப முல்லா வைக்கோல் பை எடுத்துச் சென்றார். முல்லா நினைத்தபடிதான் சோதனை நடந்தது. அதனால் இந்தத் தலைப்பு பொருத்தமுடையதாகும்.

Q15 வைக்கோல்

Q16 உள்ளுணர்வு

Q17 தசைகள் சுருங்கி விரியும்போது நமது சுவாசம், சீரணம், இரத்த ஓட்டம் ஆகியவை சீராக இயங்குகின்றன.

Q18 நமது உடல் பலம் பெறும். அறிவு கூர்மை அடையும். உள்ளச்சோர்வு நீங்கும். இவையே உடற்பயிற்சி செய்வதினால் நம் உடல் பெறும் நன்மைகள் ஆகும்.

Q19 நாம் உடற்பயிற்சியைச் செய்யத் தொடங்குவதற்கு முன் நம் உடலின் அமைப்பிற்கு ஏற்ற உடற்பயிற்சியைச் செய்ய வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

Q20 நாம் உறங்கும் போது நம் உடல் நல்ல ஓய்வைப் பெறுகிறது. சோர்வு அடைந்த உடலுக்கு உறக்கம், புத்துணர்ச்சியை வழங்குகிறது. ஆகையால், அந்தப் புத்துணர்ச்சியுடன் காலையில் உடற்பயிற்சி செய்வது சிறந்தது எனக் கூறப்படுகின்றது.

Q21 யோகாசனம் நம் உடலுக்கு உறுதி அளிப்பதோடு மனச்சோர்வைக் குறைத்து மகிழ்ச்சியுடன் செயல்பட உறுதுணை புரிகின்றது.

Q22 இளமையிலிருந்தே உடற்பயிற்சி செய்வதன் பலனை மாணவர்கள் அடைய வேண்டும் என்பதற்காகப் பள்ளிகளில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

Q23 அ. களைப்பு
ஆ. பலம்

## தேர்வுத்தாள் 2

1 இருந்ததெல்லாம்
2 காணப்பட்டார்
3 தன்னிடம்
4 குளிரால்
5 துணியை
6 முன்னேற முடியும்.
7 திறமைசாலி.
8 வாசிக்க வேண்டும்.
9 நன்றாக இயங்காது.
10 பாராட்டப்பட்டார்கள்.

Q11

| | |
|---|---|
| வருமானம் போதாமையாலும் வறுமையாலும் நண்பர்கள் வேறுநாட்டுக்குச் சென்றனர். | √ |

எந்த வேலை செய்தாலும் வருமானம் குறைவாகவே இருந்தது. பக்கத்து ஊர்களுக்குச் சென்றும் அதிக ஊதியம் கிடைக்கவில்லை. வறுமை வாட்டியது. எனவே, நால்வரும் வேறுநாட்டுக்குப் பிழைப்பு தேடிச் சென்றனர்.